உ

சிவமயம்

திருச்சிற்றம்பலத்து ஒளிரும் சிவனை,
தினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெருமானைச் செம்பொன்னம்பலவனை!
நினைமின் மனனே! நினைமின் மனனே!



யாழ் / இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக்
கொண்ட

அமரர்.

# திரு. சுவாமிநாதன் சிவகணநாதன்

அவர்களின் 90ம் நாள்

# நினைவு மலர்

11-10-2001

# அமரர்
# சுவாமிநாதன் சிவகணநாதன்
## அவர்கள்



விழிப்பு
**29-03-1964**

உறக்கம்
**14-07-2001**

## குழந்தை தேவாரம்

நிரைகழரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர் நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர் பாகமாய்ப்புணர்ந்த வடிவினர் கொடியணிவிடையர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவும் அளப்பரும் கனமணிவரன்றிக்
குரை கடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையமர்ந்தாரே.

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தம்மை நன்னெறிக்குய்வது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

## பெரியார் தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசைபாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உனை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

மாசில் வீணையும், மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடிநீழலே.

## தோழர் தேவாரம்

அங்கத்துறு நோய்களடியார் மேலொழித்தருளி
வங்கம்மலிசூழ்ந்த கடல்மாதோட்ட நல்நகரில்
பங்கம் செய்த மணவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்குமடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்ல மெய்பொருளுக்கடியேன்
விரிபொழில் சூழ்குன்றையார் விறன்மிண்டற்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாரொடுநோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்க்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரியாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர்புரங்கள் செற்றவெம்சிவனை
திருவீழிமிழலைவீற்றிருந்த கொற்றவன் தன்னை
கண்டுகண்டென்னுள்ளம் குளிர
என் கண் குளிர்ந்தனவே.



## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
யாரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்பரிசு பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாழும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்றிடச் சிவகதிதானே.

## பட்டினத்தார்

என்செயலாவது யாதொன்றுமில்லை இனித்தெய்வமே
உன்செயலே என்றுணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினையாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே

## பெரியபுராணம்

கற்பனைக் கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

ஏறுமயிலேறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழிபேசும் முகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருளல்வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்தபெருமாளே.

## வாழ்த்து

வான்முகில்வழாது பெய்க மலிவளஞ்சுரக்க - மன்னன்
கோன்முறை அரசுசெய்க -குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள்ஓங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## கவியரசு கண்ணதாசன்

.........வாழ்வில் துன்பம் வரவு - சுகம்செலவு இருப்பது கனவு
காலம்வகுத்த கணக்கை இங்கேயார் காணுவார்..........

## வள்ளுவம்

உறங்குவது போலுஞ் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு

## நாமக்கல்கவிஞர் இராமலிங்கம்பிள்ளை

அல்லா என்பார் சிலபேர்கள்
அயன் அரி என்பர் சிலபேர்கள்
வல்லான் அவன் பரமண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா ' நிர்வாணம் '
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒரு பொருள் இருக்கிறது.



# சுவாமிநாதன் - சிவகணநாதன்

அமரர் சுவாமிநாதன் சிவகாணநாதன் அவர்கள் எமது பாடசாலையில் சக ஆசிரியர்களில் ஒருவராக வாழ்ந்தவர். அன்பும், பண்பும் நிறைந்தவர் நல்ல நண்பர், அன்னார் எல்லோருடனும் இனிமையாகப் பழகுபவர். கற்பித்தல் முயற்சிகளில் உதாரண புருஷராகத்திகழ்ந்தவர். கடமைவழி மறுப்புக் கூறாதவர். இவரால் உருவாக்கப்பட்ட எம் மாணவர்கள் இன்றும் பொறியியல் பீடத்தினை அலங்கரித்துக் காணப்படுகின்றனர்.

பிறவியில் சைவமான இவர் எமைப் பிரியும் வரையில் சைவமாகவே வாழ்ந்ததுடன் எம் பாடசாலை ஆன்மீகச் செயற்பாடு களில் முன்னின்று செயற்பட்டவர். இத்தகைய சேவையாளர் ஒருவரின் அகால மரணமும், இம்மறைவும் எம்மையும் எமைச் சார்ந்த கல்விச் சமூகத்தையும் பேரதிர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளது. இவரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் துணை புரிவார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அ. அருள்பாஸ்கரன்**
தலைவர், ஆசிரியர் கழகம்
இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருக்கோணமலை



# அடக்கமான ஆசிரியர்

அடக்கமும் அமைதியும் கொண்ட ஒரு பண்பான ஆசிரியராக எம்முடன் கடமையாற்றிய திரு. சு. சிவகணநாதன் அவர்கள் அமரராகி தொண்ணூறு நாட்களாகி விட்டன. இவரது அகால மறைவு எமது கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் பெரும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்திவிட்டது.

09 வருடங்களாக எமது கல்லூரியில் கடமையாற்றிய, சகலருடனும் எவ்விதமான சிறு முரண்பாடுகளுமின்றி மிகவும் நட்புறவோடு பழகிப் பணிபுரிந்த, ஒரு ஆசிரியரின் திடீர் மறைவு எங்களை அதிர்ச்சியடைய வைத்ததில் வியப்பில்லை. ஆசிரியர்களைப் போலவே மாணவர்களுடனும் பண்பாகப் பழகும் சுபாவம் கொண்டவராக இருந்தார். இவர் கற்பித்த எமது கல்லூரியின் மாணவர்கள் பலர் இன்று பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவரது அகால மறைவைக் கேள்வியுற்றதும் பல்கலைக் கழகங்களிலிருந்து இவரது மாணவர்கள் ஓடோடி வந்தமை மாணவர்கள் இவர் மீது கொண்டிருந்த மதிப்பைப் புலப்படுத்துகின்றது.

இவர் ஒரு கணிதப்பட்டதாரி ஆசிரியராக இருந்தபோதிலும், பல்துறையிலும் சிந்தனை வளமிக்க ஒருவராகத் திகழ்ந்தார். கலைகளிலும் இவருக்கு நாட்டமிருந்தது. கடந்த வருடம் எமது கல்லூரியில் சர்வதேச ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்ட போது ஆசிரியர்களால் மேடையேற்றப்பட்ட "நெருக்குவாரம்" என்ற நாடகத்தில் இவர் அற்புதமாக நடித்திருந்ததை இப்போது எண்ணிப்பார்க்கின்றேன்.

கல்லூரிக்கு வெளியிலே இவருக்கு நண்பர்கள் குறைவு "எனக்கு அப்பாவும் அம்மாவும் இந்துக் கல்லூரிதான்" என்று அமரர் சிவகணநாதன் அடிக்கடி சொல்லிக் கொள்வாராம். அந்தளவிற்கு கல்லூரியில் பாசமும் பற்றும் வைத்திருந்தவர்.



மற்றவர் மனம் புண்படப் பேசமாட்டாத ஒரு உயர்ந்த பண்பாடு கொண்ட இந்த நல்ல மனிதனை 38வது வயதில் ஏன்தான் காலன் விரைந்து கொண்டு சென்று விட்டானோ தெரியவில்லை.

அவரது அன்பு மனையாளுக்கும், குழந்தைகளுக்கும் ஆறுதல் சொல்ல எங்களுக்குத் தெரியவில்லை. ஆயினும் அமரர் சிவகணநாதன் எங்கள் மனதில் நீங்காதிருப்பார். அவரது நினைவு எங்களை ஆட்கொண்டுள்ளது. அவரது ஆன்மா சாந்தியடைவதாக.

தி. தண்டாயுதபாணி
அதிபர்

தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருக்கோணமலை.
11-10-2001



# சுவாமிநாதன் - சிவகணநாதன்
# வாழ்க்கை வரலாறு

தந்தை - பெரியகிராமமான யாழ் ஏழாலை ஊரில் சைவவேளாண்மரபில் உதித்த காலஞ் சென்ற திரு. தியாகராசா சுவாமிநாதன் அவர்கள். தாய் - சைவமும் தமிழும் தவழ்ந்து விளையாடிய யாழ் - இணுவை மண்ணில் சைவவேளாண் குலத்தில் உதித்த ஆனந்தர் - செல்லம்மா தம்பதியரின் இளையமகளான காலஞ்சென்ற திருமதி மனோன்மணி அவர்கள். கணநாதன் கருவில் இருந்தபோதே பிதாவைப் பிரிந்தார். 29.03.1964ல் உதித்த இவர் பெற்றோருக்கு ஏகபுத்திரன். உரியபராயம் அடைந்ததும் யா/இணுவில் அமெரிக்கன் மிஷன் ஆரம்ப பள்ளியிற்பயின்று, புலமைத் தேர்வில் சித்தி எய்தி யா/இந்துக்கல்லூரியில் சேர்ந்தார். இணைந்த கணிதத்திலும், இரசாயன வியலிலும் சிறப்புற்று விளங்கிய இவர் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி எய்தி யாழ்/பல்கலைகழகம் புகுந்து பட்டதாரியானார். பாலர் வகுப்பு முதல் பல்கலைகழகம் வரை ஆசான்களினதும், மாணவர்களினதும் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரானார். சிறிது காலம் கொ/தெமட்டக்கொட தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய இவர், தொடர்ந்து 15.09.90 முதல் 30.08.92 வரை தி/மூதூர் மத்திய கல்லூாயில் பட்டதாரி ஆசிரியராகக் கடமைபுரிந்தார்.

பின்னர் 1992.09.01 முதல் தி/இராமகிருஷ்ண சபை ஸ்ரீகோணேஸ்வரா இந்துவில், அவரது அகால மரணம் வரை (14.07.2001) ஆசிரியராகக் கடமையாற்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் முதலியோரின் நன்மதிப்பைப் பெற்றார். திருமலையில் கற்பித்த காலத்தில் தாயாருடன் வசித்த இவர் 1994.04.09ம் நாள் தாயார் இயற்கை எய்தியதும் அவர் அடைந்த துயரத்தை வார்த்தைகளினால் வடிக்க முடியாது. காலச் சுழற்சியில் 1995 புரட்டாதி 7ம் நாள் இணுவை இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் திரு. கயிலாயபிள்ளை - தங்கரத்தினம் தம்பதியினரின் இளைய மகள் அபரஞ்சி அவர்களை வாழ்க்கைத்



துணைவியாக ஏற்றார். இல்லற வாழ்வில் இருபெண் மகவுகளைப் பெற்று மழலைமொழி கேட்டு தாயைப்பிரிந்த துயரை ஓரளவு மறந்தார். இரண்டாயிரமாம் ஆண்டு ஜுலை மாதம் ஆசிரியராகப் பணிபுரிய மாலைதீவு சென்ற இவர் பிள்ளைகளின் பாச ஈர்ப்பினால் அவ்வேலையைத் துறந்து விட்டு அதே ஆண்டு ஆவணி மாதத்திலேயே தாயகம் திரும்பினார். திரும்பவும் இந்துவில் தம் பணியைத் தொடர்ந்தார்.

தாய்மாமன் திரு. ஆனந்தர் - சுப்பிரமணியம் குடும்பம் (கனடா), பெரியதாய் கனகமணி தந்தை வழிச் சகோதரன் ஸ்ரீகாந், மைத்துனி புஸ்பராணி ஆகியோரின் பாசத்தில் ஈர்க்கப்பட்டார்.

திடீரென மாமன்மார், மாமிமார் பெரியதந்தை நவம், பெரியதாய் கனகமணி, சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிகள், சகலன்மார் நண்பர், உற்றார், உறவினர், சகலரையும் தவிப்புக்கும், அதிர்ச்சிக்கும் ஆளாக்கிவிட்டு 2001.07.14 சனிக்கிழமை அகாலமரணமானார். அவரின் ஆத்மா சாந்தியடைய ஐந்தொழில் அதிபதியை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

**மனைவி - அபரஞ்சி**
**பிள்ளைகள் - கயப்பிரியா, திவாகரி**
**குடும்பத்தினர்.**

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.

## CONSOLATION

Face it as it comes. Life is beautiful!
Sorrow is beautiful! Disappointment is beautiful!
Yes, life is beautiful!!!
From "This Modern World" compiled by H. G. Wells
(H. G. Wells)

## ACKNOWLEDGEMENT

We express our profound gratitude to all those who had helped us in various ways, especially to

(1) The Principal, The Staff & The Students of T/ R.K.M Sri Koneswara Hindu College

(2) Students of Engineering Faculty of Peradeniya University

(3) The Neighbours of our present and earlier residences.

## CHEERS!

Wife: **Abaranji Sivkananathan**
Children: **Kayappriya, Thivahari**
**& Family.**

50/4, College Street,
Trincomalee.

**உதயன் பிரிண்டர்ஸ்**
39, அருணகிரி வீதி,
திருக்கோணமலை
☎ *026-20783*